O.S.No.186/2014

Date:24.06.2019

வாதி தரப்பு சாட்சி -4-து.விக்னேஸ்குமார்.- த.பெ. துரை

சாட்சி இன்று ஆஜராகி சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

நான் எந்த வருடத்தில் இருந்து சக்கிமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக 2018 ஜீலை மாதத்தில் இருந்து வேலை செய்து வருகிறேன். நான் எதற்க்காக நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்தேன் என்று தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு யார், யார் மீது, எதற்க்காக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். எதற்காக இந்த வழக்கு போடப்பட்டது என்றால் உழவடை தொடர்பாக இந்திரா என்ற நபர் இராமசாமி வேளார் வகையறா மீது வழக்கு போட்டுள்ளார். இந்த வழக்கின் சொத்தின் புல எண், அதன் விஸ்தீரணம் அதில் என்ன பயிர் போடப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் 178/2,ல், 177/3A ஆகியவற்றில் நெல் பயிரடப்பட்டுள்ளது , விஸ்தீரணம் என்ன என்பதை ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். இந்த வழக்க சொத்து தொடர்புடைய இரண்டு புல எண்களுடைய விபரத்தை மட்டும் தான் என்னால் சொல்ல முடியும் என்றால் சொல்ல முடியும். மீதமுள்ள இரண்டு சர்வே எண்கள் என்ன என்றால் 178/1 மற்றும் 177/2. அந்த புல எண்களில் என்ன உள்ளது என்றால் 178/1 ல் நெல் மற்றம் 177/2 ல் களம், கிணறு மற்றும் காரை வீடு உள்ளது. என் முதல் விசாரணை சாட்சியத்தில் புல எண்177/2 ல்கிணறு இருந்தாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டள்ள ஆவணங்கள் என்ன என்று தெரியுமா என்றால் வருவாய்த்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்னனென்ன தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியும். வருவாய்த்துறை ஆவணங்கள் யாரால், யாருக்கு எந்த வருடம் வழங்கப்பட்டது என்ற விபரம் எனக்க தெரியுமா என்றால் தெரியும். வருவாய்த்துறை ஆவணங்கள் என்னென்ன வழங்கப்பட்டது என்றால் 1386 பசலியின் ஒளிப்பட நகல், நடப்பு 2019ம் ஆண்டின் அ பதிவேட்டில் நகல். அந்த பசலியை வழங்கிய அதிகாரி யார் என்றால் மதுரை கிழக்கு வட்டாச்சியர். அந்த பசலி ஆவணத்தின் அசல் எந்த

த.பெ. துரை குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வருடத்தை சேர்ந்தது என்றால் தற்போது தெரியாது. தாசில்தார் கையெழுத்துடும் ஆவணத்தின் உண்மை நகலை நான் சான்றளிக்க இயலுமா என்றால் இயலாது. நீ.சா.ஆ.1 ஆவணத்தில் உண்மை நகல் என்று நான் சான்றளிக்க இயலுமா என்றால் இயலும். நீ.சா.ஆ.1 ஆவணத்தின் எங்கள் அலுவலகத்தில் அதிகார முத்திரை இல்லை என்றால் சரிதான், அசல் ஆவணத்தில் கோபுர முத்திரை உள்ளது. எனது முதல் விசாரணையில் நீ.சா.ஆ.1 தொடர்புடைய பசலியில் வாதி தான் விவசாயம் செய்வதாக தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீ.சா.ஆ.1 யாரால் வழங்கப்பட்டது என்றால் நான்தான். 1977 பசலி ஆண்டிற்கு பின்பு அந்த இடத்தில் யாரால் உழவடை செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது, நடப்பு விபரங்கள் தான் தெரியும். எங்கள் வருவாய்துறையில் இருந்து கிருஸ்ணின் மகள் தான் இந்திரா என்று தாக்கல் செய்ய இயலுமா என்றால் இல்லை. தாவா சொத்தை நான் நேரடியாக சென்று பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். 1977 வருடத்திற்க முன்பு யார் பெயரில் பசலி அடங்கல் வழங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. உழவடை பட்டா வழங்குவதற்க ஒரு நபர் எத்தனை வருடம் அந்த இடத்தில் உழவடை செய்திருக்க வேண்டும் என்றால் தெரியாது. நில உரிமையாளர் இருக்கும் போது ஒருவர் உழவடை செய்தால் உழவடைதாரின் பெயரில் பட்டா வழங்க இயலுமா என்றால் இயலாது. 1977 வருடத்திற்கு கிருஸ்ணன் என்பவருக்கு உழவடைதாராக பசலி அடங்கலில் அங்கீகாரம் கொடுக்க இயலுமா என்றால் இயலாது. கிருஸ்ணன் உழவடைதாராக இல்லாததால் தான் அவருக்கோ அவருடைய மகளுக்கோ உழவடைதாராக அங்கீகாரம் வழங்க முடியததால் தான் என்றால் 1977 ம் வருடத்தை மட்டும் கணக்கில் எடுத்து கொண்டு வழங்க முடியாது. நீ.சா.ஆ.1 உண்மைக்க மாறானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை